## பிரிவு - 4

## 23. ஈ.கை

**குறள் 221:**
வறியார்க்கொன் றீவதே ஈகைமற் றெல்லாங்
குறியெதிர்ப்பை நீர துடைத்து

ஏதும் இல்லாதவர்க்குக் கொடுப்பதே ஈகை ஆகும்; ஏனைய ஈகை எல்லாம் ஒரு எதிர்பார்ப்பையே குறியாகக் கொண்டது

**குறள் 222:**
நல்லா றெனினுங் கொளல்தீது மேலுலகம்
இல்லெனினும் ஈதலே நன்று

பிறரிடம் பொருள் பெற்றுக் கொள்ளுதல் நல்ல நெறிக்கு உட்பட்டது என் று கருதினாலும் அதைப் பெற்றுக் கொள்ளுதல் தீமையானது, அதே வேளை கொடுப்பதால் விண்ணுலக வாய்ப்பு தவறிவிடும் என்ற நிலை ஏற்பட்டாலும் கொடுப்பதே நல்லது.

**குறள் 223:**
இலனென்னும் எவ்வம் உரையாமை ஈதல்
குலனுடையான் கண்ணே யுள

**இல்லை என்று யாரிடமும் கூறாத பண்பானது ஈதல் செய்யும் குடிபிறந்தவனின் குண அதிசயமாகும்**

**குறள் 224:**
இன்னா திரக்கப் படுதல் இரந்தவர்
இன்முகங் காணு மளவு

**ஈதல் செய்பவரின் துயருற்று இரங்கும் நிலையானது, தன்னிடம் இரந்து வருபவரது மகிழ்ச்சி கொண்ட முகத்தைக் காணும் வரையும் நீடிக்கும்.**

**குறள் 225:**
ஆற்றுவா ராற்றல் பசியாற்றல் அப்பசியை
மாற்றுவா ராற்றலிற் பின்

**தன் சொந்தப் பசியைப் சகித்துக்கொள்வது ஒரு சிறந்த வல்லமையானாலும் அது மற்றவர் பசியைப் போக்கும் வல்லமைக்கு பின்னான ஒரு நிலையையே எடுத்துக் கொள்கின்றது**

**குறள் 226:**
அற்றார் அழிபசி தீர்த்தல் அஃதொருவன்
பெற்றான் பொருள்வைப் புழி

வறியவரின் கடும்பசியைத் தீர்க்க வேண்டும் அதுவே பொருள் பெற்ற ஒருவன் அப் பொருளைத் தனக்குப் பிற்காலத்தில் உதவுமாறு சேர்த்து வைக்கும் இடமாகும்.

**குறள் 227:**
பாத்தூண் மரீஇ யவனைப் பசியென்னுந்
தீப்பிணி தீண்ட லரிது

பலருடனும் பகிர்ந்து உண்ணும் பழக்கம் உடையவனை பசி என்னும் கொடிய நோய் தொடுவதும் அரிது.

**குறள் 228:**
ஈத்துவக்கும் இன்பம் அறியார்கொல் தாமுடைமை
வைத்திழக்கும் வன்க ணவர்

பிறர்க்குக் கொடுத்து மகிழும் இன்பத்தை அறியாரே? தம்பொருளைச் சேர்த்து வைத்து இழக்கும் கொடியவர்கள்.

**குறள் 229:**
இரத்தலின் இன்னாது மன்ற நிரப்பிய
தாமே தமிய ருணல்

ஈயாமல் தாமே தமியராய் உண்பது இரந்து நிற்பதைக் காட்டிலும் கொடுமையானது

**குறள் 230:**
சாதலின் இன்னாத தில்லை இனிததூஉம்
ஈத லியையாக் கடை

சாவதை விடத் துன்பமானது வேறொன்றும் இல்லை, ஆனால் வறியவர்க்கு ஒரு பொருள் கொடுக்க முடியாதநிலை வந்தபோது அச் சாதலும் இனியதே ஆகும்.